தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 10 திகதி: 20/11/2021

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**கீழ்வரும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

கவியரசு கண்ணதாசன் பற்றிப் பலரும் அறிவோம். கவிதைகள், திரையிசைப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், கட்டுரைகள், நாவல்கள், நூல்கள் என்று பலதரப்பட்ட எழுத்து ஆளுமைகளிலும் முத்திரை பதித்தவர் கவிஞர் கண்ணதாசன்.

"மானிட ஜாதியில் தனிமனிதன் நான்
படைப்பதனால் என் பேர் இறைவன்
மானிட இனத்தை ஆட்டி வைப்பேன், அவர்
மாண்டுவிட்டால் அதைப் பாடிவைப்பேன், நான்
நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த
நிலையிலும் எனக்கு மரணமில்லை"

என்று பாடிவைத்தவர் அவர்.

அவரது இயற்பெயர் முத்தையா. பெற்றோர் சாத்தப்பன் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆவர். கண்ணதாசன் காரைக்குடியிலுள்ள சிறுகூடல்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும், ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் 6000 பாடல்களையும், பல கட்டுரைகளையும் காவியங்களையும் எழுதியவர்.

மேதாவி, சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல்திரை, முல்லை ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். பத்திரிகை ஆசிரியர் பணிக்கு வந்தபோது அவர் தனக்கு வைத்துக்கொண்ட புனைபெயர்தான் "கண்ணதாசன்" என்பதாகும்.

கண்ணதாசன் சங்க இலக்கியங்களிலும், கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பாரதியாரை மானசீகக் குருவாகக் கொண்டவர் கண்ணதாசன். பத்திரிகைப் பணிகளை உதறிவிட்டு முழுநேரமாகத் திரைப்படப் பாடல்களை எழுத வாய்ப்புத் தேடினார் கண்ணதாசன். கே.ராம்நாத், தாம் இயக்கிய "கன்னியின் காதலி" திரைப்படத்தில் பாடல் எழுதக் கண்ணதாசனுக்கு வாய்ப்புக் கொடுத்தார். "கலங்காதிரு மனமே" என்பது தான் கண்ணதாசனின் முதல் பாடல். அதன் பிறகு 30 ஆண்டுகள் திரைத்துறையை முற்றுமுழுதாக ஆளுமை செய்தார் கண்ணதாசன். "முத்தான முத்தல்லவோ" பாடல் மிகக் குறைந்த நேரத்தில் (பத்து நிமிடங்களில்) அவர் எழுதிய பாடல் ஆகும். "நெஞ்சம் மறப்பதில்லை" பாடல் எழுத அதிக நாட்கள் எடுத்துக் கொண்டார்.

பாடல் எழுதுவது மட்டுமல்லாது கதை எழுதுவது, வசனம் எழுதுவது, படத்தயாரிப்பு எனச் சகல துறைகளிலும் கண்ணதாசன் இயங்கினார்.

இசையமைப்பாளர்கள் பலரும் தமது இசையில் அவருடைய பாடல் இடம் பெறுவதைப் பெருமையாகக் கருதினார்கள். கண்ணதாசனுடைய காலத்தில் அவருக்கு நிகர் அவரே.

தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர் கண்ணதாசன். மாங்கனி, கவிதாஞ்சலி,அனார்கலி, இயேசு காவியம், தெய்வதரிசனம், சந்தித்தேன் சிந்தித்தேன், பாரிமலைக்கொடி என்று பல கவிதை நூல்களை எழுதியுள்ளார். கண்ணதாசன் எழுதிய நாவல்களில் ஆயிரங்கால் மண்டபம், இராஜ தண்டனை, சிவகங்கைச் சீமை, குமரிக்கண்டம், சேரமான் காதலி, சிங்காரி பார்த்த சென்னை என்பன சிலவாகும், "சேரமான் காதலி" நாவல் சாகித்ய அகடமி விருது பெற்றது. இவை தவிர அர்த்தமுள்ள இந்து மதம், பகவத் கீதை விளக்கவுரை ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். தனது வாழ்க்கையைக் கூறும் வகையில் தன் கதையாக "மனவாசம்" "வனவாசம்" என இருநூல்களை இவர் எழுதியுள்ளார்.

நோய் காரணமாக 1981 ஜூலை 24ந் திகதி சிகாகோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 1981 ஒக்டோபர் 17ந் திகதி இறையடி சேர்ந்தார். இதற்கு முன்பே தமக்குத்தாமே இரங்கற்பா எழுதி வைத்தார் கண்ணதாசன். அதன் கடைசி வரி "ஏற்றிய செந்தீயே நீ எரிவதிலும் அவன் பாட்டை எழுந்து பாடு" என்பதாகும்.

1. கண்ணதாசனின் எழுத்து ஆளுமையை எங்கெங்கே கண்டீர்? (3 புள்ளி)

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

2. "மானிட ஜாதியில்" என்ற பாடலில் கண்ணதாசன் தன்னைப் பற்றி என்ன கூறுகிறார்? (3 புள்ளி)

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

3. "கண்ணதாசன்" என்ற பெயர் எப்படி அவருக்கு வந்தது? (1 புள்ளி)

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

4. கண்ணதாசன் பணியாற்றிய இதழ்கள் நான்கின் பெயர் தருக.
(2 புள்ளி)

5. அட்டவணையை நிரப்புக. (4 புள்ளி)

| | |
|---|---|
| கண்ணதாசன் முதல் எழுதிய பாடல் | |
| அவர் பாடல் எழுதிய முதல் திரைப்படம் | |
| மிகக் குறைந்த நேரத்தில் எழுதிய பாடல் | |
| எழுத அதிகநாள் எடுத்த பாடல் | |

6. கண்ணதாசன் எழுதிய கவிதை நூல்கள் ஆறு எழுதுக. (3 புள்ளி)

7. கண்ணதாசனுக்கு சாகித்ய அகடமி விருதினை அளித்த நாவல் எது?
(1 புள்ளி)

8. கண்ணதாசனின் கதையைக் கூறும் நூல்கள் எவை? (2 புள்ளி)

9. தான் இறக்கு முன்பே எழுதி வைத்த இரங்கற்பாவில் அவர் கூறியது என்ன?
(2 புள்ளி)

10. இப்பந்தியை வாசித்தபின் கண்ணதாசனைப்பற்றி உமது மனதில் நிலைத்த கருத்துகளை உமது சொந்த நடையில் எழுதுக.

(4 புள்ளி)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**கீழ்வரும் பந்தியை வாசித்து அப்பந்தியில் வந்த முக்கிய கருத்துக்களை அட்டவணைப்படுத்துக.**

வாழ்க்கை என்பது உணவு, உடை, உறையுள் முதலிய வற்றைத் தேடிப் பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், ஆடை நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காகப் பல கருவிகள் செய்து கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், இருக்க இருப்பிடத்திற்கும் போராட வேண்டிய வறுமை நிலையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் அடுத்த நிலையை அடையமுடியாது. கஞ்சிக் கவலையுள்ள நாட்டில் கலைக்கவலை எழாது. கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று இருப்பிடமும் பெற்றவரே அடுத்த படியை எய்தும் தகுதி வாய்ந்தவர்கள். வறுமையற்ற நாடே முன்னேற்றத்துக்குத் தகுதியுடைய நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலைவாழ்வு என்னும் இரண்டாம் படிக்கு உயரவல்லவர். இரண்டாம் நிலை பெற்ற மக்கள் வயிற்றுக்கவலை அற்றவராய் புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அதன்மூலம் இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கினிய காட்சியாக ஓவியம், சிற்பம், நடனம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை, கதை, காவியம் முதலியவற்றை நாடுவர். இந் நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்.

பந்தியில் வந்த முக்கிய கருத்துகள்:

| | |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல் (100 சொற்களுக்குக் குறையாது எழுதுக)**

கொவிட்-19 முடக்கம் காரணமாக வெளியே செல்ல முடியாத நிலைமை மாறி, இப்போது சற்று முன்னேற்றம் உண்டாகியிருக்கிறது. மெல்பேனில் வசிக்கும் உமது மாமா குடும்பத்தினரைக் கோடை விடுமுறைக்குச் சிட்னிக்கு வரும்படி கேட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட குறிப்புகளை வைத்துப் பந்தி அமைக்க.**

**தலைப்பு இடவும்.**

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை பிறந்த இடம் பழைய சேலம் மாவட்டம் மோகனூர்
- தந்தையார் - வெங்கடராமன் பிள்ளை
- தாயார் - அம்மணியம்மாள்
- பிறந்த திகதி – 19.10.1888
- இவ்வுலகை நீத்த திகதி – 24.08.1972
- தொழில் - தாசில்தார் அலுவலகப் பணியாளர், பள்ளி ஆசிரியர், கவி புனைவது, நாவல் எழுதுவது, மேடைப்பேச்சு.
- சேவை - சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றது, சிறை சென்றது, காங்கிரஸ் கட்சியில் இணைந்து பணியாற்றியது.

- சிறப்பான பாடல்வரிகள்:
  1. "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"
  2. "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு"
  3. "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"
  4. "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

- இவரது படைப்புகள்:
  1. நாவல்கள் - மலைக்கள்ளன், காணாமல் போன கல்யாணப் பெண்
  2. கவிதை நூல்கள் - அவனும் அவளும், சங்கொலி, பிரார்த்தனை
  3. நாடகம் - மாமன்மகள், அரவணை சுந்தரம். இவைதவிர பல பாடல்கள், கட்டுரைகள்.

- பெற்ற சிறப்புகள்:
  1. தமிழ்நாட்டின் முதலாவது அரசவைக்கவிஞர் பதவி
  2. பத்மபூஷண் விருது
  3. தமிழக சட்ட மேலவை உறுப்பினர் பதவி

- சிறந்த கவிஞர், தமிழறிஞர், எழுத்தாளர், மேடைப் பேச்சாளர், விடுதலைப் போராட்ட வீரர், பத்திரிகை ஆசிரியர், சமூக சீர்திருத்தவாதி என்ற நிலைகளில் மிளிர்ந்தவர்

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**வாக்கியம் அமைத்தல்**

**பின்வரும் சொற்களை வைத்து குறைந்தது ஏழு சொற்கள் அமையுமாறு தனித்தனி வாக்கியம் எழுதுக.**

1. தமிழ்மொழி
2. கொரோனா தடுப்பூசி
3. வெள்ளப்பெருக்கு
4. நூல்நிலையம்
5. தொழில்நுட்ப வளர்ச்சி

1. ______________________________________________________________________________

2. ______________________________________________________________________________

3. ______________________________________________________________________________

4. ______________________________________________________________________________

5. ______________________________________________________________________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல் (150 - 175 சொற்களில் எழுதுக).**

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து எழுதுக.

1. "2020 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக
2. "ஈழநாட்டின் புகழ்பூத்த கவிஞர் சோமசுந்தரப் புலவர்" பற்றி உமது தமிழ்ப் பாடசாலையில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சினை எழுதுக
3. கொரோனா முடக்கத்தின் பின்பு பாடசாலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. பாடசாலைக்குச் சென்றபோது நீர் அனுபவித்து மகிழ்ந்த, நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்களைத் தினக்குறிப்பேடாக எழுதுக. (குறைந்தது 3 நாள்களுக்கு எழுதுக)